# இந்த அரசாங்கம் தேர்தல்களை இலக்காகக் கொண்டுள்ளது! அதனடிப்படையிலேயே திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

## பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹன சுட்டிக்காட்டு

தேர்தல்களை இலக்காகக் கொண்டே தற்போதைய அரசாங்கம் பல திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் இதனை அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் இரண்டிற்கும் 10 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஆனால், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகின்றன. ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடத்தில் நடத்தப்பட வேண்டும்.

தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானிக்க வேண்டும். தேர்தலை இலக்காகக் கொண்டு அரசாங்கம் பல திட்டங்களையும் ஆரம்பித்துள்ளது.

தேர்தல் அதிகாரிகள் ஜூலை மாதத்திற்குள் ஜனாதிபதித் தேர்தலுக்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். அரசாங்கம் தனது அபிவிருத்தித் திட்டங்களை ஜூலை மாதத்திற்குள் நிறைவேற்றினால், மாத்திரமே அது தேர்தல் ரீதியாக அவர்களுக்குப் பயனளிக்கும். தற்போதைய அவர்களது செயற்பாடுகள் பொது நிதியை தவறாக பயன்படுத்துவதற்குச் சமமானது.

அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் ஜூலை 31 ஆம் திகதிக்குள் முடிக்குமாறு அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு இரண்டு சுற்று நிருபங்கள் வழங்கியுள்ளோம். ஆனால், தொடர்ந்தும் அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

இது ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறச் செய்யும் முயற்சியாகும், எனவும் ரோஹன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார். (04)




மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 26 வெள்ளிக்கிழமை 09.02.2024 கதிர் 178







# சிவில் சமூகத்தினரின் கைகளைப் பற்றிக்கொண்டு ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சியாம்!

## தேர்தல் ஆணையர்மீதும் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு



சிவில் சமூகத்தினரின் கைகளைப் பற்றிக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சி இடம்பெற்று வருவதாக எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று (8) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதியினால் நேற்று முன்தினம் (07) மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரை அறிக்கை தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரையில் ஜனாதிபதி தேர்தல் பற்றி ஒரு வார்த்தை கூட உள்ளதா? சிவில் சமூகத்தின் கைகளை பற்றியவாறு ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சி இடம்பெற்று வருகின்றது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க புதிய வழிமுறைகளை உருவாக்கும் முயற்சி இடம்பெற்று வருகின்றது. அதற்கு கால அவகாசம் தேவைப்படுகின்றது. கடந்த வாரம் தேர்தல் ஆணையாளர் கலந்துரையாடலொன்றை நடத்தியிருந்தார். அப்போது 2➤

# யாழ்.மாநகர சபை ஆணையராக கிருஸ்ணேந்திரன் பொறுப்பேற்பு



இதுவரை காலமும் யாழ் மாநகர சபை ஆணையாளராக பணியாற்றிய இ.த.ஜெயசீலன்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராக கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள நிலையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராக இருந்த சி.ச.கிருஸ்ணேந்திரன் யாழ் மாநகர சபையின் ஆணையாளராக இன்று பொறுப்பேற்றார்.

# உதவித்தொகை கொடுப்பனவுகள் ஜனவரி முதல் அதிகரிப்படவுள்ளன

அங்கவீனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்தும் வகையில் அதிகரிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, அங்கவீனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூ. 5000 உதவித்தொகை ரூ.7500 ஆகவும், முதியோருக்கு வழங்கப்பட்ட ரூ. 2000 உதவித் தொகை ரூ. 3000 ஆகவும் அதிகரிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தற்போது "அஸ்வெசும" நலத்திட்ட உதவிகளை பெறும் குடும்பங்களில் உள்ள 2➤

# அமுல் பால் உற்பத்தி நிறுவனத்திற்கு அனுரகுமார திஸாநாயக்க விஜயம்



தேசிய மக்கள் மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினர், இந்தியாவின் குஜராத்தில் அமைந்துள்ள அமுல் பால் உற்பத்தி நிறுவனத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

அமுல் பால் உற்பத்தி நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி, தேசிய பால்வள மேம்பாட்டுத்துறையின் 2➤

# குறுகிய கால கடன் கட்டுப்பாடுகள் தளர்வு இலங்கை மத்திய வங்கி விசேட அறிவிப்பு

இலங்கை மத்திய வங்கியினால், வணிக வங்கிகளுக்கு குறுகிய கால கடன்களை வழங்குவதற்கு அமுல்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் மேலும் தளர்த் தப்பட்டுள்ளன. பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் அமுலா கும் வகையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

நாணயக் கொள்கை சபை நேற்று கூடிய போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால், கடந்த வருடம் ஜனவரி மாதம் 16 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில், வணிக வங்கிகளுக்கு குறுகிய கால கடன்களை வழங்குவதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் குறித்த கட்டுப்பாடுகளை தளர்த்துவதன் மூலம், சந்தையில் வட்டி வீதம் வீழ்ச்சியடையும் வேகம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (04)

# இலங்கையில் மீண்டும் மின்வெட்டு வரலாம்!

நாட்டில் மீண்டும் மின்வெட்டு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் கலாநிதி நரேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் எடுக்கும் சில தீர்மானங்கள் காரணமாக மக்கள் பல்வேறு விளைவுகளைச் சந்திக்க நேரிடுகின்றது.

இவ்வருடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள புதுப்பிக்கத்தக்க மின் நிலையத் திட்டங்களை 2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# இலங்கையின் வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதி வருமானம் 9.1 வீதத்தால் வீழ்ச்சி

## மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிப்பு

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி, கடந்த வருடம் (2023) இலங்கையின் மொத்த வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதி வருமானம் 9.1 வீதத்தால் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், 2022 ஆம் ஆண்டில் 13106 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த மொத்த சரக்கு ஏற்றுமதி வருமானம் கடந்த ஆண்டில் (2023) 11,911 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த டிசம்பர் மாதத்தில் சரக்கு ஏற்றுமதி வருமானம் 6.2 வீதத்தால்குறைந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 2022ஆம் ஆண்டில் 18291 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த வர்த்தகப் பொருட்களின் இறக்குமதிச் செலவு கடந்த வருடம் (2023) 16811 மில்லியன் அமெரிக்க டொலர்களாக 8.1 வீதத்தால் குறைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரெப-17)

# தெற்காசியாவிலேயே அதிக மின் கட்டணம் இலங்கையில் தான் என்கிறது ஆய்வு முடிவு!

தெற்காசியாவிலேயே அதிக மின்சார கட்டணம் இலங்கையிலேயே வசூலிக்கப்படுவதாக பகுப்பாய்வு அறிக்கை மூலம் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

தெற்காசியாவிலேயே அதிக மின்சார கட்டணம் இலங்கையிலேயே வசூலிக்கப்படுவதாக வெரிட்டே ரிசேஜ் (Verité Research) நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் மின்சார கட்டணம் 3 மடங்கு அதிகமாக உள்ளதென அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

பொருளாதாரம் மற்றும் தொடர்புபட்ட பகுப்பாய்வுத் தகவல்களை வழங்கும் இலங்கையின் பிரபல நிறுவனமான public finance.lk வின் பகுப்பாய்வு அறிக்கையில், 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளூர் மின்சார பாவனையாளர்கள் 100, 200, 300 அலகுகளை பயன்படுத்தியபோது செலுத்தியுள்ள கட்டணம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இதன் பகுப்பாய்வின் போது வழங்குநரின் உற்பத்திச் செலவு மாத்திரம் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் மேலதிகமாக அறவிடப்படுகின்ற சமூக பாதுகாப்பு வரி போன்ற அரச வரிகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படவில்லை என வெரிட்டே ரிசேஜ் நிறுவனம் சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கைக்கு அடுத்ததாக தெற்காசியாவின் அதிக மின் கட்டணம் வசூலிக்கும் நாடாக பாகிஸ்தான் காணப்படுகின்றது.

எனினும், இலங்கையுடன் ஒப்பிடும்போது குறித்த கட்டணம் மிகவும் குறைவாகவுள்ளதெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# திருமலையில் மனைவியை படுகொலை செய்த கணவன்

குடும்பத் தகராறு காரணமாக மனைவியைக் கணவன் கழுத்து நெரித்துப் படுகொலை செய்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

தோப்பூர் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளம் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபரான 33 வயதுடைய கணவர் மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனைவியின் ஆடையின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி அவரின் கழுத்தைக் கணவன் நெரித்துக் கொலை செய்துள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கொழும்பில் நாளை நீர் வெட்டு!

(கே எ ஹமீட்)

கொழும்பில் சில பகுதிகளில் நாளைய தினம் 15 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

நாளை (10) மாலை 5 மணி முதல் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி வரை இந்த நீர்வெட்டு அமுல்ப்படுத்தப்படவுள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு 11,12, 13, 14, மற்றும் 15 ஆகிய பிரதேசங்களுக்கு இவ்வாறு நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அம்பத்தல நீர் விநியோக திருத்தப்பணிகள் காரணமாக நீர் விநியோகம் இடைநிறுத்தப்படுவதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

## இலங்கையில் மீண்டும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத் தாவிட்டால் நாட்டில் மீண்டும் மின்சார நெருக்கடி ஏற்படலாம்.

எனவே முழுமையான செயற்றிறன் ஆற்றல் விசேட முறைமைகளைப் பயன்படுத்தி எதிர்காலத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும், என்றும் நரேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார். (04)

## அமுல் பால் உற்பத்தி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் மற்றும் பால்பண்ணைத் துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டுள்ளார்.

இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிப்பது, பால் பொருட்களின் விலையைக் குறைப்பது, உற்பத்தித் திறனை அதிகரிப்பது, தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

அத்துடன், இலங்கையில் தாங்கள் மேற்கொள்ளவுள்ள முதலீடுகள் குறித்தும் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் அனுர குமார திஸாநாயக்க கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான பண்ணைகளை பார்வையிடுவதற்காக இந்தியாவின் அமுல் பால் உற்பத்தி நிறுவன பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று நாட்டிற்கு வருகை தந்துள்ளது.

நாட்டிலுள்ள பண்ணைகளை நேற்று தொடக்கம் ஆய்வு செய்ய ஆரம்பித்துள்ளதாக தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

அந்த பண்ணைகளின் எதிர்கால மேம்பாட்டுத் திட்டங்களை அமுல் நிறுவன பிரதிநிதிகள் குழு நடைமுறைப்படுத்தவுள்ளது.

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான 31 பண்ணைகள், சுமார் 28,000 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் காணப்படுகின்றன.

அவற்றை அமுல் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு முன்னர், பண்ணைகளின் பெறுமதியை மதிப்பிடத் தொடங்கியுள்ளதாக தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

## உதவித்தொகை கொடுப்பனவுகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றுத்திறனாளிகள், வயதானவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் ஆகிய உதவித்தொகை பெற தகுதியுடையோர் இந்த ஆண்டின் (2024) முதல் காலாண்டில் அடையாளம் காணப்படுவார்கள். நடப்பு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் அவர்களுக்கு இந்த அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ரெப-21)

## சிவில் சமூகத்தினரின் கைகளைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளாட்சித் தேர்தலை நடத்த முயன்ற போது பணம் இல்லை என்றார்கள். தேர்தல் ஆணைக்குழு அதற்கு எதுவும் செய்யவில்லை.

அதேபோல் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கும் பணமில்லை என கூறினால் ஆணைக்குழு என்ன செய்யும்? என கேட்டபோது, தேர்தல் ஆணையளரிடம் அதற்கு பதில் இல்லை. வாய் தடுமாறினார்.

ஆனால், எவ்வாறான பிரச்சினைகள் வந்தாலும் கூட்டு எதிர்க்கட்சியாகிய நாம் ஒன்றிணைந்து தேர்தலில் வெற்றியீட்டுவோம் என்பது உறுதி" என்றார். (ரெப-20)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் பங்குனி உத்தரப் பொங்கல்




ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்

வரலாற்று சிறப்பு மிகு கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரபொங்கல் நிகழ்வு எதிர்வரும் பங்குனி மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் குறித்த பொங்கல் உற்சவத்தின் போது மேற்கொள்ள வேண்டிய போக்குவரத்து, பாது காப்பு மற்றும் சுகாதார வசதிகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் ஆலய முன்றலில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கண்டாவளை பிரதேச செயலாளர், மாவட்ட உதவி மாவட்ட செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட இலங்கை போக்குவரத்து மற்றும் தனியார் போக்குவரத்துத் துறையினர், மின்சார சபை உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொங்கலுடன் தொடர்புடைய திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், ஆலய நிர்வாகத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

இம்முறையும் பாரம்பரிய முறைப்படி பண்டம் எடுக்கும் வைபவம், புத்தூர்ச் சந்தி - மீசாலையிலிருந்து முன்னெடுக்கப்படவுள்ளது. எதிர்வரும் பங்குனி மாதம் 17 ஆம் திகதி விளக்கு வைப்புடன் ஆரம்பமாகி அன்று பிற்பகல் பண்ட வண்டில்கள் புத்தூர்ச் சந்தி நோக்கிச் சென்று பொங்கல் அன்று 24 ஆம் திகதியன்று பண்ட வண்டில்கள் ஆலயத்தை வந்தடையும். பாரம்பரியமாக மேற்கொள்ளும் பொங்கல் நிகழ்வும் நடைபெறும். (02)

## கல்முனை பஹ்ரியா மகாவித்தியாலயத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு



(நூருல் ஹுதா உமர்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களினால் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் கல்முனை கல்வி வலய கல்முனை கமு.கமு.அல் - பஹ்ரியா மகா வித்தியாலயத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம் பைசால் தலைமையில் விளையாட்டு அபிவிருத்தி மேம்பாடு, உடற்கட்டமைப்பு வளர்ச்சித் திறன் அபிவிருத்தி போன்ற நோக்கங்களுக்காக உடல் வலுவூட்டல் உபகரணங்கள் முதற்கட்டமாக வழங்கி வைக்கப்பட்ட இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விளையாட்டு உபகரணங்களை மாணவர்களிடம் வழங்கி வைத்தார்

இந்நிகழ்வில் பாடசாலை உடற்பயிற்சி ஆசிரியர் யூ.எல். சிபான், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான எம்.ஏ.எம் ரியால், ஏ.டபிள்யூ அசாட்கான் மற்றும் பிரிலியண்ட் விளையாட்டுக் கழக தலைவரும், கல்முனை 12ம் வட்டார அமைப்பாளருமான எம்.எஸ்.எம் பழீல், பிரிலியண்ட் விளையாட்டுக் கழக செயலாளர் எஸ்.டி.எம் பஸ்வாக், பழைய மாணவர் சங்க செயலாளர் எஸ்.எம் ஹாஜா, பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர் ஏ.எல்.எம் நபீர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.







## முன் பள்ளி ஆசிரியர்களுக்கான பால்நிலை சமத்துவ செயலமர்வு

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பால்நிலை சமத்துவம் மற்றும் உளநலன், உளவியல் நடத்தை சார் அணுகுமுறைகள் தொடர்பான செயலமர்வு நேற்று நடைபெற்றது.

அமைப்பின் தலைவி திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக உளநல ஆற்றுப்படுத்துனர் ஏ.சுதர்சன் விளக்கவுரை யாற்றினார்.

இதில் அமைப்பின் இணைப்பாளர் மற்றும் கள உத்தியோகத்தர், திட்ட இணைப்பாளர் சிறுவர் பாது காப்பு உத்தியோகத்தர் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முன் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ‘செம்பாத்தாள்’ கூத்துருவ நாடகம்

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் ‘செம்பாத்தாள்’ கூத்துருவ நாடகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (11.02.2024) மாலை 6.45 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையற்றப்படவுள்ளது.

ஒல்லாந்தர் காலத்தில் 1679 இல் வன்னிப் பிரதேசத்தில் தென்னமரவடி பிராந்தியத்திற்கு தலைமை வகித்த மரிய செம்பாத்தாவின் வரலாற்று அடிப்படைகளில் இருந்து கற்பனையுடன் உருவாக்கப்பட்ட படைப்பாக ‘செம்பாத்தாள்’ கூத்துருவ நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலையில் கல்வி பயிலும் வேளையிலேயே திறன் பாடங்களையும் பயிற்றுவிக்க வேண்டும்

## கிழக்கின் கேடயம் பிரதானி எஸ்.எம். சபீஸ்



(நூருல் ஹுதா உமர்)

மாணவர்கள் பாடசாலையில் கல்வி பயிலும் வேளையில் அவர்களுக்கு திறன் பாடத்திட்டங்களை வழங்கி அவர்கள் பல்கலைக்கழகத்திற்கு செல்லும் முன்னர் பயிற்றுவிக்க வேண்டும். பல்கலைக்கழகத்தில் 4 பேர் சேர்ந்து புதிய தொழில் முயற்சியை உருவாக்கும் முறைமையோடு மாணவர்களை வெளியில் அனுப்ப வேண்டும். அப்போதுதான் தொழில் தேடுபவர்களுக்கு பதிலாக தொழில் துறையை உருவாக்குபவர்களை உற்பத்தி செய்ய முடியும் என கிழக்கின் கேடயம் பிரதானியும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவருமான எஸ். எம். சபீஸ் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை - அக்கரைப்பற்று பிரதேச பாடசாலைகளில் இருந்து திறமை சித்தி பெற்ற மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் விழா வாசம் அமைப்பின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் உரை நிகழ்த்திய அவர், துரதிஷ்டவசமாக எமது கல்வி முறை இன்னமும் அவ்விடத்துக்கு வரவில்லை. அதனால் பெற்றோர்கள் இம்முறையை நோக்கி எமது குழந்தைகள் மீது முதலீடு செய்யுங்கள். குறுகியகால திறன் கற்கை நெறிகளிலும் கவனம் செலுத்துங்கள். மேலும் இக்குழந்தைகள் விசேட ஆற்றல் கொண்டவர்கள். அவர்களது எதிர்காலம் சிறப்பாக அமைவதோடு இந்த சமூகத்துக்கும் பிரயோசனமுடையதாக அமைய பிரார்த்திக்கின்றேன்.

தூக்கம் வந்தால் தூங்கி விடலாம், பசி எடுத்தால் சாப்பிட்டு விடலாம், தாகம் எடுத்தால் நீர் அருந்திவிடலாம் ஆனால் சாதனை படைத்தவர்களின் உணர்வுகளுக்கு நாம் என்ன வழங்கிட முடியும். அது பாராட்டு ஒன்றே தான் அதனைத்தான் வாசம் அமைப்பு மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளது என்றார்.

இந்நிகழ்வில் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், பெற்றோர்கள், பொதுமக்கள், வாசம் அமைப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# பாலமுனை பாலர் பாடசாலைக்கு கதிரைகள் வழங்கி வைப்பு

(எம் எப். நவாஸ்)

பாலமுனை ஹில்ப் சமூக சேவை மன்றத்தினால் ஹில்ப் இங்க்லீஸ் ஹவுஸ் பாலர் பாடசாலை நிருவாகத்தினர் 91'ள டீநுவுவுநுசு புருஜனுயுேஊநு அமைப்பிடம் மாணவர்களுக்கான கதிரைகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க அண்மையில் அவ் அமைப்பின் நிருவாகத்தினர் மாணவர்களுக்கான கதிரைகளை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் அவ் அமைப்பின் தலைவர் வை.எல்.எம்.றிப்கான், செயலாளர் எ.மு.றிபான், பொருளாளர் ஆர்.எம்.சமீர், உபதலைவர் கே.ஆர்.கியாஸ், உபசெயலாளர் ஐ.எம்.ஹம்தான் , நிருவாக உறுப்பினர்கள், ஹில்ப் இங்லீஸ் ஹவுஸ் பாலர் பாடசாலை நிருவாகத்தின் தலைவர் எம்.ஜே.எம்.றிஸ்வான்(EDO), செயலாளர் ஏ.எல்.தாஸீம், நிருவாக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை கடற்கரையில் திண்மக்கழிவுகள் சேகரிப்பு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஆறு மற்றும் குளங்களிலுள்ள நீர் கடலில் கலந்ததன் காரணமாக கடற்கரையோரங்களில் பிளாஸ்டிக் போன்ற உக்காத திண்மக் கழிவுகள் பெருமளவில் சேர்ந்து காணப்பட்டது.

இதன் காரணமாக கரைவலை மீன்பிடியில் ஈடுபடுவோரும் பொழுதுபோக்கிற்காக கடற்கரையோரங்களுக்கு செல்வோரும் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகி வந்தனர்.

இதனை கருத்திற் கொண்டு கல்முனை இளைஞர் அமைப்பும் பிரதேச மக்களும் விஷ்னு கோயிலுக்கு முன்பாக சிரமதான பணியில் ஈடுபட்டிருந்தனர்.

பெண்கள் சிலர் கையில் பதாதைகளை ஏந்தி சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பது சம்பந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தனர்.

# சாளம்பக்கேணி ஸாஹிரா பாலர் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு



(எம்.எம்.றம்ஸீன்)

சாளம்பைக்கேணி-04 மத்திய முகாம் பிரதேசத்தில் சுமார் 76 வருடங்களாக இயங்கி வருகின்ற ஸாகிறா பாலர் பாடசாலையினால் சிறுவர்களுக்கான கலை, கலாச்சார நிகழ்ச்சி மற்றும் பரிசளிப்பு விழா பாலர் பாடசாலையின் பணிப்பாளர் திருமதி. ஏ.பஸீலா ஆசிரியையின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் அவர்கள் கலந்து கொண்டிருந்தார்.

இந்நிகழ்வுக்கு சிறுவர்களின் பெற்றோர்கள், ஊர்ப்பிரமுகர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



# டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் புலமைப் பரிசில் திட்டம் இந்திய உயர்ஸ்தானிகராலயம் விண்ணப்பம் கோருகிறது

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களை வரவேற்கிறது.

பொறியியல், அறிவியல், வணிகம், பொருளாதாரம், வணிகம், மனிதநேயம் மற்றும் கலை போன்ற பல்வேறு துறைகளில் இளங்கலை அல்லது முதுகலை மற்றும் பிஎச்டி படிப்புகளுக்கான மதிப்புமிக்க இந்திய நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் படிப்பதற்காக இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது, ஆனால் மருத்துவம் அல்லது பாராமெடிக்கல் உட்பட, பேஷன் டிசைன் மற்றும் சட்டப் படிப்புகள். இலங்கை பிரஜைகளுக்கு பிரத்தியேகமாக வழங்கப்படும் புலமைப் பரிசில்கள் 2024-2025 கல்வி அமர்வுக்கானது.

இந்தத் திட்டமானது பாடநெறியின் முழு காலத்திற்கான முழு கல்விக் கட்டணம், மாதாந்திர சத்துணவு கொடுப் பனவு மற்றும் புத்தகங்கள் மற்றும் காகிதாதிகளுக்கான வருடாந்திர மானியம் ஆகியவற்றை உள்ளடக்கியது. கூடுதலாக, இந்தியாவின் அருகிலுள்ள இடத்திற்கான விமானக் கட்டணம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கான கல்விச் சுற்றுப்பயணங்களுக்கான வருடாந்திர மானியம், பல துணைப் பலன்களைத் தவிர. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அந்தந்த வளாகத்திற்குள் விடுதி வசதியும் வழங்கப்படும்.

இந்த பிறநாட்டு புலமைப்பரிசில் விருதுக்கு இந்திய அரசாங்கம் சிறந்த இலங்கை பிரஜைகளை தேர்ந்தெடுக்கிறது. விண்ணப்பதாரர்கள் தேர்வு இலங்கை அரசின் கல்வி அமைச்சுடன் கலந்தாலோசிக்கப்படுகிறது. கல்வி அமைச்சின் www.mohe.gov.lk என்ற இணையத் தளத்தில் தேவையான விபரங்கள் கிடைக்கும்.

ஆர் வமுள்ள விண்ணப்பதாரர்கள், தகுதிக்கான அளவு கோல்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கல்வி அமைச்சின், கொழும்பு, இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் கல்விப் பிரிவை (0112421605, 0112422788, 0112422789 அல்லது eduwing.colombo@mea.gov.in) அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேர்வு நடைமுறை கைக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரச நாடக விழாவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

அரச நாடக விழாவிற்கான நீண்ட நாடகம் மற்றும் குறுநாடகம் ஆகியவற்றிற்கான சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சின் வழிநடத்தலின் கீழ், கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைப் பேரவையின் அரச நாடக ஆலோசனைச் சபை ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன.

விண்ணப்பங்களை கலாசார திணைக்களம், அரச நாடக மன்றம், 8 ஆம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்லை என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன், நாடளாவிய ரீதியிலுள்ள மாவட்ட செயலக கலாசார திணைக்கள உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை 0112872385 அல்லது 0112872030 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும் முடியும் என கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. விண்ணப்பங்கள் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது ஏப்ரல் 10 ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்னதாக கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் அரச நாடகக் குழுவிற்கு நேரடியாக வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ரெப-19)








## வடக்குக்கு உதவி செய்ய நெதர்லாந்து தயார்!

வட மாகாணத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்கு தேவையான பங்களிப்பைச் செய்யத் தயாராக இருப்பதாக நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான துணைத்தூதுவர் இவன் ருட்ஜென்ஸ் உறுதியளித்துள்ளார்.

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் உடன், ஆளுநர் செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயாராக உள்ளோம்.

அத்துடன் முதலீட்டுத் திட்டங்களை ஊக்குவித்து வடக்கு மாகாண அபிவிருத்திக்கு தேவையான பங்களிப்பை வழங்கவும் நாம் தயாராக உள்ளோம், என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜோர்தானில் பணியாற்றிய இலங்கையர் திரும்பினர்!

ஜோர்தானில் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் சிரமத்திற்குள்ளான 66 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

ஜோர்தானில் இத்தொழிற்சாலைகளை நடத்தி வந்த இந்திய முதலீட்டாளர்கள் அங்கு பணியாற்றிய ஊழியர்களுக்கு தெரிவிக்காமல் தொழிற்சாலைகளை மூடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், அந்தத் தொழிற்சாலைகளில் பணியாற்றிய இலங்கையர்கள் குழுவொன்று தமக்கான அனைத்து சலுகைகளையும் பெற்றுக்கொண்டு இன்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக தாயகம் திரும்பியிருந்தனர்.

இந்த ஜோர்தானிய தொழிற்சாலையில் பணிபுரிந்த மற்றுமொரு இலங்கையர் குழு எதிர்வரும் இரண்டு நாட்களில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக ஜோர்தானில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## சடலங்களாக மீட்கப்பட்ட இரண்டு வயோதிபர்கள்

கொழும்பில் வீடொன்றில் இருந்து இரண்டு வயோதிபர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மிரிஹானை, ஜுபிலி மாவத்தை பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தே இன்று இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அயலவர்கள் வழங்கிய தகவலுக்கு அமைய இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

80 வயதுடைய ஆணும், 96 வயதுடைய பெண்ணும் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

இரண்டு சடலங்களும் பிரேத பரிசோதனைகளுக்காக களுபோவில போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வயோதிபர்கள் கொலை செய்யப்பட்டார்களா? அல்லது இயற்கை மரணமா? என்பது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!